DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No.152/2019**

**Deposition of Witness for Prosecution : P.W.12**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேதுராஜன் | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 24.03.2025

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்சமயம் திருக்கண்ணபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.08.2019ம் தேதி நான் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தபோது நாகூர் குற்ற எண் 279/2019 சட்டப்பிரிவு 174 Crpc, Alter 302 IPC வழக்கில் இறந்துபோன கார்த்திக் த/பெ. கிட்டப்பா, அகரகொந்தை என்பவரது பிரேத பரிசோதனைக்கு நாகூர் காவல் ஆய்வாளர் உத்தரவின் பேரில் சென்றேன். 18.08.2019ஆம் தேதி உடல் கூராய்வுக்கு தண்ணீர் மற்றும் விசிரா எடுத்துக்கொண்டு தஞ்சாவூர் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு சென்று ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் இவ்வழக்கில் இறந்துபோன கார்த்தி என்பவரது பிணத்தின் மீதான விசாரணை முடித்து அறிக்கை தயார் செய்யப்பட்ட பின்பு தான் என்னிடம் பிரேதத்தை ஒப்படைத்தார் என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No.152-2019**

**Deposition of Witness for Prosecution : P.W.11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமன் | தகப்பனார் பெயர் கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 24.03.2025

**முதல் விசாரணை**

நான் நரிமணம் கீழத்தெருவில் வசித்து வருகிறேன். கார்த்தி இறந்து போன விபரம் எனக்கு தெரியாது. மறுநாள் ஸ்டேனில் கையெழுத்து போட சொன்னார் கையெழுத்து போட்டேன். வெற்றுதாளில் தான் கையொப்பம் வாங்கினார்கள். கார்த்தி எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

## அரசு தரப்பு குறுக்கு விசாரணை

எனக்கு குடிப்பழக்கம் உண்டு. ஞாயிற்றுக்கிழமை மட்டும் குடிப்பேன். கடந்த 04.08.2019ஆம் தேதி ECR ரோட்டில் உள்ள வெற்றாற்று பாளத்தில் உட்கார்ந்து பாதி பிராந்தியை குடித்துவிட்டு மீதியை வீட்டிற்கு எடுத்துக்கொண்டு செல்லலாம் என்று இருந்தபோது கார்த்திக்கும், மகேந்திரனும் மகேந்திரன் ஸ்கூட்டி வண்டியை ஓட்ட பின்னால் கார்த்தி உட்கார்ந்து இருந்தார் என்றும், நான் உட்கார்ந்திருந்த இடம் வந்தபோது

இருவரும் சண்டை போட்டார்கள் என்று கார்த்தி எனக்கு தெரிந்த நபர் என்பதால் இருவரையும் சமாதானம் செய்து அந்த மற்றொரு நபர் கார்த்திக்கின் மைத்துனர் என்று சொன்னார் என்றும், அப்போது மகேந்திரன் மனைவி ஜெயந்தி மகேந்திரன் உடன் வர மறுப்பது கார்த்திக்கினால் தான் என்று இரண்டு பேரும் தண்ணி அடித்துக்கொண்டு பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது மகேந்திரன் கார்த்திக்கை கீழே தள்ளிவிட்டு அதனால் கார்த்திக் கீழே விழுந்துவிட்டார் என்றும், நான் பயந்துகொண்டு அங்கிருந்து சென்றுவிட்டேன் என்றும், மறுநாள் கார்த்திக்கின் பிரேதம் தண்ணீரில் மிதப்பதாக கேள்விபட்டேன் என்றும், ஆய்வாளர் விசாரிக்கும்போது சொல்லிவிட்டு எதிரியை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் மறுநாள் தான் எனக்கு தகவல் தெரியும் என்று பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** : இல்லை.